# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

வெள்ளிக்கிழமை 25.11.2021 supeedsam.com supeedsam@gmail.com







# முஸ்லிம் குரல்களுக்காக நாங்கள் ஏக்கத்தோடு காத்திருக்கிறோம்

நாங்கள் இஸ்லாமியச் சகோதரர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம். அதேவேளையில் தமிழ் மக்களினுடைய உரிமைகளுக்காக முஸ்லிம் குரல்கள் எப்போது எழும் என நாங்கள் ஏக்கத்தோடு காத்திருக்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினருடனான சந்திப்பு ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

02 ஆம் பக்கத்தில்...



## மொட்டு- கைக்குள் வெடித்தது மோதல்



(காந்தன்)

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதாக நினைக்கும் தற்போதைய அரசு அதில் சுதந்திரக்கட்சி எம். பிக்கள் 14 பேர் இருப்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்றார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக அரசாங்க தரப்பு பொய் குற்றச்சாட்டுக்களையும் சேறு பூசும் வகையிலான கருத்துகளையும் முன்வைப்பதாக குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், கடந்த செவ்வாய்க் கிழமையன்று நாடாளுமன்றத்தில் முன்னாள் அரச தலைவர் 200 வாகனங்களை பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று, அரச தலைவரது செயலகத்தின்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் நிலவுகின்றது.

இலங்கைக்கு தென்கிழக்காக தற்போது நிலை கொண்டுள்ள கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழைபெய்துவருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## நாங்கள் தயாராக தான் இருக்கிறோம் குடியுரிமை பறிக்கவும் தயங்கமாட்டேன்



ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பு கூறுவோரின் பிரஜாவுரிமையை கூட, தேவை ஏற்படும் பட்சத்தில் இரத்து செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளதாக அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்தார்.

அரசதலைவர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையை புறக்கணித்த அமெரிக்கா



அமெரிக்காவினால் உலக நாடுகளுக்கான ஜனநாயக மாநாட்டில் இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படாததன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கையை புறக்கணித்துள்ளார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்,

02 ஆம் பக்கத்தில்...

## குறிஞ்சாக்கேணி படகு விபத்து 4 வது சந்தேக நபருக்கு விளக்கமறியல்



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்துடன் தொடர்புடையதாக நான்காவது சந்தேக நபரான கிண்ணியா நகர சபை தவிசாளர்

02 ஆம் பக்கத்தில்...

## யாழ்.பல்கலையில் மாவீரர் நினைவேந்தல் அனுஸ்டிப்பு

(யாழ்.கீதன்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றையதினம் பல்கலைக்கழக மாணவர்களினால் மாவீரர் நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...



## படகு விபத்து தொடர்பில் தீவிர விசாரணை விசேட குழு நியமிப்பு: கிழக்கு மாகாண ஆளுநர்





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிழக்கு மாகாணத்தில் தற்போது செயற்படும் அனைத்து பாலங்களின் தரம் குறித்து ஆராய விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் எனக் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவு மற்றும் கடற்படையினரால் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் போது காயமடைந்து சிகிச்சை பெற்று

02 ஆம் பக்கத்தில்...

## ஓய்ந்தது கிண்ணியா



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் முகமாக நேற்று கிண்ணியா சிவில் சமூகம் இணைந்து கடைகள்,பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள்

02 ஆம் பக்கத்தில்...

## மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் 5 ஆவது இலக்கிய விழாவில்















## யாழ்.பல்கலையில் மாவீரர் நினைவேந்தல் அனுஸ்டிப்பு

முழந்தாளில் மாணவர்கள் இருந்து வீரமறவர்களுக்கு தமது ஆத்மார்த்தமான அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

குறிப்பாகப் பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தினரும், பொலிஸாரும், இராணுவ, பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மாணவர்கள் ஆத்மார்த்தமான முறையில் தமது அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

## இலங்கையை புறக்கணித்த அமெரிக்கா

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தெற்காசிய நாடுகளான இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், நிகழ்நிலை தொழிநுட்பத்தின் ஊடாக எதிர்வரும் டிசம்பர் மாதம் 9, 10ம் திகதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்குபற்றுமாறு இலங்கைக்கு பைடன் அழைப்பு விடுக்கவில்லை.

சீனா, ரஸ்யா மற்றும் இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு மட்டுமே இவ்வாறு ஜனநாயக மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்வான், பிலிப்பைன்ஸ், மெக்ஸிக்கோ உள்ளிட்ட 110 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளன.

அரசாங்கத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், தனியார்துறையினர் உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டில் பங்குபற்ற உள்ளனர்.

ஜனநாயகங்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் பற்றி இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

## குறிஞ்சாக்கேணி படகு விபத்து 4 வது சந்தேக

எஸ்.எச்.எம்.நளீமை எதிர்வரும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர்படுத்திய போதே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக் கேணி மிக்கு படகை பாவனை செய்வதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த தவிசாளர் அனர்த்தம் இடம்பெறுவதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்காவது சந்தேக நபர் என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதேவேளை தண்டனைச் சட்டக்கோவை 298,273 ,275 ஆகிய தண்டனை சட்டக்கோவைகளின் அடிப்படையில் கிண்ணியா பொலிஸார் குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர்.

இருந்தபதிலும் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூன்று நபர்களும் விளக்கமறியலில் இருப்பதாகவும் நான்காவது நபரான குறித்த கிண்ணியா நகர சபை தவிசாளரான எஸ்.எச்.எம்.நளீம் விளக்கமறியலில் வைக்குமாறும் கிண்ணியா பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் பரிசீலனை செய்த திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

## ஓய்ந்தது கிண்ணியா

மூடப்பட்டு வெள்ளை நிற கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது பிரதான வீதிகள் கடைகள் அரச திணைக்களங்கள் வங்கிகள் ,பள்ளிவாயல்கள்,வீடுகள் என பல இடங்களிலும் வெள்ளை கொடிகள் பறக்கவிடப்பட்டன. உயிரிழந்த நான்கு மாணவர்கள் உட்பட ஆறு உயிரிழப்புக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை மக்கள் தெரிவிக்கின்றனர்.முள்ளிப்பொத்தானை கோட்ட பாடசாலைகளிலும் பாடசாலை இடம் பெறாமல் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## படகு விபத்து தொடர்பில் தீவிர விசாரணை விசேட குழு நியமிப்பு

வருவோரை பார்ப்பதற்காகக் கிண்ணியா தளவைத்தியசாலைக்கு சென்ற போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

‘இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க நாம் அனைவரும் உறுதி எடுக்க வேண்டும். ஒருவரையொருவர் நோக்கி விரல் நீட்டும் நேரம் இதுவல்ல. போருக்குப் பின்னர், இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பாலங்கள் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்டன. அது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திலிருந்தே ஆரம்பமானது. இலங்கையின் மிக நீளமான பாலம் கிழக்கு மாகாணத்தில் உள்ளது. இந்த இடத்தில் பாலம் கட்டும் பணி கோவிட் தொற்றால் பாதித்ததால் தாமதமானது. மாற்று வழி இருந்தபோதிலும், மக்கள் அதை பயன்படுத்த விரும்பவில்லை.

இந்த சம்பவத்தை நாங்கள் இப்போது விசாரித்து வருகிறோம். இன்று பிற்பகலில் அறிக்கை பெறப்படும். அந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். குற்றவாளிகள் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். பொறுப்பிலிருந்து யாரும் தப்ப முடியாது.

எனினும் தற்போது இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் கடற்படையினரால் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த பாலத்தின் பணிகளை விரைவில் முடிக்க அரசு கவனம் செலுத்தி வருகிறது’ என தெரிவித்துள்ளார்.

## நாங்கள் தயாராக தான் இருக்கிறோம் குடியுரிமை பறிக்கவும் தயங்கமாட்டேன்

தலைமையில் இலங்கையின் முதலாவது அதிநவீன கேபிள் தங்கும் களனி பாலத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நோய்த்தொற்று காரணமாக நாட்டை முடக்காமல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஆட்சி செய்ய முடிந்தால், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் அனைத்து திட்டங்களும் விரைவில் நிறைவேற்றப்படும்.

கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள போதிலும், அரசாங்கம் நாட்டுக்காக பலவற்றை செய்துள்ளதாகவும், தானா அல்லது தனது அரசாங்கமா அல்லது மாற்று எதிர்க்கட்சியா என மக்களிடம் தான் கேட்பதாகவும் அவர் கூறினார்.

தாம் அரசாங்கத்தில் இருந்ததில்லை என எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்திலும் மக்கள் முன்னிலையிலும் பேசுவதாகவும், ஐந்து வருடங்களாக நாட்டை ஆட்சி செய்து ஏற்படுத்திய அழிவுகளை மக்கள் மறக்கவில்லை எனவும் அரசதலைவர் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் போது இந்த நாட்டை யார் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்? அந்த நேரத்தில் எங்களிடம் வலுவான பாதுகாப்பு சேவை இருந்தது. அதனால்தான் எங்களால் போரில் வெற்றி பெற முடிந்தது. அப்போது எங்களிடம் ஒரு வலுவான உளவுத்துறை இருந்தது. அதனால்தான் போருக்குப் பிறகு எதுவும் நடக்கவில்லை.

ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்து, புலனாய்வுப் பிரிவை உருவாக்கி, போர் வீரர்களை அழித்து, அவர்களின் மனநிலையைச் சிதைத்து, தேசியப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுக்காமல் இந்த நாட்டை ஆள வேண்டும் என்று கூறியதால்தான் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது.

அரசதலைவர் ஆணைக்குழுவை நியமித்தார்கள். குற்றவாளிகள் யார் என்பதை ஆணையம் தெளிவாகக் கூறியுள்ளது. இதற்கு அப்போதைய அரசதலைவர், பிரதமர் மற்றும் அமைச்சரவை பொறுப்பேற்க வேண்டும் என தெளிவாக கூறியுள்ளனர்.

இது தொடர்பில் நாடாளுமன்றம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளோம்.

கடந்த அரசாங்கத்தைப் போன்று அரசியல் பழிவாங்கல்களில் தலையிட மாட்டோம். ஒருபுறம், நீதித்துறையின் சுதந்திரத்தைக் கேட்பவர்களைத் தண்டிக்கச் சொல்ல முடியாது. நீதித்துறை அதைச் செய்கிறது. அதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதனை உரிய காலத்தில் செய்ய வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து இவற்றுக்கு காரணமானவர்களின் உரிமைகளை இல்லாதொழிக்கலாம். அந்த தவறுகள் மீண்டும் நடக்காத வகையில் செய்யலாம். அதைத்தான் கேட்கிறோம். அவர்களுக்கும் நாங்கள் தயார் என்பதை இந்த இடத்தில் கூறுகிறோம். இதை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் என்றும் கூறுகிறோம்.

நான் நல்லா இல்லையா, நம்ம ஆளுங்க நல்லா இல்லன்னா, மாற்று வழி எதிர்க்கட்சி தானா என மக்களிடம் கேட்கிறோம். ஐந்தாண்டுகள் எப்படி ஆட்சி செய்திருக்கிறார்கள் என்று பார்த்தோம். சிறுபான்மையினரின் வாக்குகளை கோட்டாபய ராஜபக்ச பெறாத காரணத்தினால் வெற்றிபெற முடியாது என அப்போது கூறப்பட்டது. நாங்கள் வெற்றி பெற்றோமோ இல்லையோ, இந்த நாட்டில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததை விட மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களை மக்கள் எமக்கு வழங்கியுள்ளனர்.

நான் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எமக்கு வழங்கியது அந்த குழுவின் தோல்வி, பலவீனமான ஆட்சி மற்றும் அவர்களின் பழிவாங்கலை வெறுத்த மக்களால் தான் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில்

இதன்காரணமாக மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று தொடக்கம் பெய்துவரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் போக்குவரத்து செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

அத்துடன் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையேற்பட்டுள்ளதுடன் வீதிகளும் நீரில் மூழ்கியுள்ளதை காண முடிகின்றது.

## மொட்டு- கைக்குள் வெடித்தது மோதல்

வருடாந்த செலவு 3.5 பில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இது முற்றிலும் பொய்யான கருத்தாகும்.

எனக்கு நான்கு வாகனங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தன. அரசாங்கத் தரப்பின் இதுபோன்ற கருத்துகள் தவறானதும் சேறுபூசும் வகையிலான செயற்பாடுகளாகும். முன்னர் நடந்த விடயங்களை என்னாலும் வெளியிட முடியும்.

எனது ஆட்சிகாலத்தில் செலவு செய்யப்பட்டதாக தெரிவித்து 3.5 பில்லியன் ரூபாவையும், தற்போதைய அரச தலைவர் 2020 ஆம் ஆண்டில் செலவு செய்த 1.5 பில்லியன் ரூபாவை ஒப்பிட்டு நான் பெருந்தொகை பணத்தை செலவு செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எனது காலத்தில் அரவ தலைவரது செயலகத்தினூடாக 7 பிரதான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வேலைத்திட்டங்கள் இன்று எந்தவொரு இடத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரியவில்லை. முன்னர் இருந்த அரசாங்கமும் அதனை நடைமுறைபடுத்த வில்லை.

ஆகவே, அரசாங்க தரப்பிலிருந்து இவ்வாறு தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது தவறான கருத்தாகும் எனக் கூறியுள்ளார்.

## முஸ்லிம் குரல்களுக்காக நாங்கள் ஏக்கத்தோடு

நாங்கள் இருவரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைப்பயண போராட்டம் இடம்பெற்ற போது இரண்டாவது நாளாக காத்தான்குடிக்கு வந்தபோது முழு காத்தான்குடியும் திரண்டு வந்து சந்தித்தது. ஒரு அரசியல் தலைவர்களும் வரவில்லை.

அதைத் தொடர்ந்தது ஓட்டமாவடியிலும் அதே போன்ற ஒரு வரவேற்பு. கிண்ணியாவில் மட்டும் தான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எங்களை வந்து சந்தித்து எங்களோடு பக்கத்திலே நின்று உரையாற்றினார். வேறொருவரும் வரத் துணியவில்லை.

நாங்கள் இஸ்லாமியச் சகோதரர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம். அதே வேளையில் தமிழ் மக்களினுடைய உரிமைகளுக்காக முஸ்லிம் குரல்கள் எப்போது எழும் என நாங்கள் ஏக்கத்தோடு காத்திருக்கிறோம்.

போராட்டத்தின் போது எங்களுடன் முஸ்லிம் சமூகத்தினர் நடந்து வந்தார்கள். ஆனால் அவர்களின் எல்லைகளோடு நின்றுவிடுவார்கள். அப்போது நான் ‘முழுத்தூரமும் எங்களுடன் நீங்கள் நடந்து வர வேண்டும்’ என்று சொன்னேன்.

அது நடைப் பயணத்தில் மட்டுமல்ல. எங்களுடைய அரசியல் பயணத்திலும் எங்களுடன் கைகோர்த்து முழு தூரமும் வரவேண்டும். அப்போது தான் எங்களுடைய இரு சமூகங்களும் எங்களுடைய நாட்டிலே தலை நிமிர்ந்து வாழமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# மாவீரர்தினம் நடாத்த காரைதீவு தவிசாளர் ஜெயசிறிலுக்கு தடையுத்தரவு உலருணவு விநியோகிக்க மற்றுமொருவருக்கும் சம்மாந்துறை நீதிவான் தடை

( வி.ரி.சகாதேவராஜா)

தமிழ்ஈழவிடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவரின் பிறந்தநாளை நினைவுகூர்ந்து நாட்டில் நடந்த யுத்தத்தின்போது காணாமல்போன தமிழ்உறவுகளின் குடும்பத்தினர் விளக்கேற்றி நினைவுகூர்தலை நடாத்த தடைவிதிக்கப்படுவதாக காரைதீவு பிரதேசசபைத்தவிசாளரும்,தமிழரசுகட்சிமாவட்டபிரதிநிதியுமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு தடையுத்தரவு பொலிசாரால் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை நீதிவான்நீதிமன்ற நீதிவானால் வழங்கப்பட்டுள்ள இவ் உத்தரவை நேற்று முன்தினம் (24)புதன்கிழமை சம்மாந்துறைப்பொலிசார்தவிசாளரது இல்லத்திற்குச் சென்று கையளித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று அதிகரித்துவரும்சூழ்நிலையில் பொதுமக்கள் சுகாதாரநடவடிக்கைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவேண்டியிருப்பதனால் இத்தகைய ஒன்றுகூடல் செயற்பாட்டுக்கு அதடையுத்தரவு பிறப்பிக்குமாறு சம்மாந்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஜெயலத் நீதிமன்றுக்கு அறிக்கைசெய்துள்ளார்.



அதற்கமைய 22ஆம் திகதி தொடக்கம் 2%ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சம்மாந்துறை நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குட்பட்ட காரைதீவுப்பிரதேசத்தில் இத்தகைய நினைவுகூறல்கள் நடைபெற தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இபக்காலப்பகுதியில் பொதுமக்களின் சொத்துக்களுக்கு சேதத்தையும் ,அழிவையும் ஏற்படுத்தும்வகையிலும், ஏனைய பொதுமக்களுக்கு கோபத்தையும் ,ஆத்திரத்தையும் ஏற்படுத்தும்வகையிலும் ,கொவிட் நோய்பரவும்வகையிலும் இந்தநினைவுகூறல்களுக்கு தடைவிதிப்பதில் நீதிமன்றம் திருப்தியடைவதால் இத்தடையுத்தரவு வழங்கப்படுகிறது.

அதேவேளை, அன்றையதினம் 200வறிய மாணவர்களுக்கு உலர்உணவுப்பார்சலை விநியோகிக்க காரைதீவு நடராஜானந்தா வீதியைச்சேர்ந்த தர்மலிங்கம் ராஜலிங்கம் என்பவர்திட்டமிட்டிருப்பதால், அதனையும் தடைசெய்வதாக தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேசத்தில் அதிகூடிய 83.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி







(வி.சுகிர்தகுமார் )

அம்பாரை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மகா ஓயா பிரதேசத்தில் அதிகூடிய 83.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொத்துவில் வானிலை அவதான நிலைய கடமைநேர அதிகாரி எம்.ஏம்.எம். அக்மல் தெரிவித்தார்.

நேற்று காலை 8மணியுடன் முடிவடைந்த 24மணித்தியாலங்களுக்குள் ரூபஸ்குளத்தில் 61.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பாணம பிரதேசத்தில் 56.9 லாகுகல 46.% தீகவாபி 45.0 அம்பாரை 39.3 அக்கரைப்பற்றில் 24.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரதேசங்களிலும் குறிப்பிட்டளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் கூறினார்.

பெய்து வரும் அடை மழையினால் மாவட்டத்தின் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், கல்முனை, நிந்தவூர், அம்பாரை, உள்ளிட்ட பிரதேசங்களின் தாழ் நில பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது.

வீதிகளும் குடியிருப்புக்களும்; வெள்ளத்தால் மூழ்கியுள்ளதுடன் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரு தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்த மழை வீழ்ச்சி இன்று காலை வரை நீடித்து வரும் நிலையில் சில குடியிருப்புகளிலும் நீர் புகுந்துள்ளது.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேசத்திலும் தாழ் நிலப்பகுதிகளும் சில வீணீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெள்ள நிலை தொடர்பில் பிரதேச செயலகமும் பிரதேசசபையும் கண்காணித்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

குறிஞ்சாக்கேணி பிரதேசத்திற்கு

# இலங்கை கடற்படையினரினால் இலவச படகு சேவை ஆரம்பம்



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தின் ஆற்றினை கடப்பதற்கு இலங்கை கடற்படையினரினால் இலவச படகு சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது



இன்று (26) உத்தியோகபூர்வமாக எவ் கடற்படையின் படகுசேவை ஆரம்பமாகவுள்ளது.

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி பலத்தின் நிர்மாணப்பணி நடைபெற்றுவரும் நிலையில் அவ் ஆற்றினை கடந்தது செல்வதற்காக கிண்ணியா நகரசபையினால் தனியார் ஒருவருக்கு இழுவை படகு மூலம் கட்டணம் செலுத்தி படகு சேவை நடைபெற்றிருந்தது.

இந் நிலையில் அவ் இழுவை படகு நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்கள் உட்பட பலருடன் பயணித்த நிலையில் விபத்திக்குள்ளாகி பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்களின் பணிப்புரைக்கமைய விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை கடற்படையின் படகு சேவை ஒன்று நாளைமுதல் ஆரம்பிக்க பட உள்ளது

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட படகில் ஆகக்கூடிய தொகையாக 25 பேர் வரை பயணிக்க மூடும் எனவும் பயணிகள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் தனித்தனியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றையதினம் இவ் படகு சேவை இன்றைய தினம் திருகோணமலை கடட்ப்படையினரினால் மேற்ப்பார்வையிட்டு வந்ததுடன் நாளை முதல் இவ் படகுசேவை ஆரம்பிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமையில்லையேல் எதிர்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் கிழக்கில் அதிகரிக்கும்

## சாணக்கியன் எச்சரிக்கை!

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாக செயற்படாவிடின், எதிர்க்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் மாகாணத்தில் அதிகரித்துவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கனடா வாழ் இலங்கை முஸ்லீம் சமூகத்தினர் புதன்கிழமை சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், உண்மையிலேயே என்னை பொறுத்தவரையில் நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைத்து சமூகங்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவராகவே நான் என்னை பார்க்கின்றேன்.

சில இஸ்லாமிய அரசியல் வாதிகள் மத்தியில் கருத்து ஒன்று உள்ளது. இவர் என்ன எங்களுடைய பிரச்சனைகளை கதைக்கின்றார். எங்களுக்காக பேசுகின்றார் என. எனினும் நான் அனைத்து பிரச்சனைகளுக்காகவும் குரல் கொடுகின்றேன்.



அதிலே இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலேயே அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் போது எங்களை பாராட்டுவதனை விடவும், இஸ்லாமியர்களுடைய பாராட்டுக்கள் அதிகமாக வருகின்றது.

எனக்கு முன்னர் உரையாற்றிய ஒருவர் சொன்னார் நாங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்போவதில்லை என்று. அது உண்மைதான். என்னை பொறுத்த வரையில் நான் அந்த வாக்குகளை எதிர்பார்த்து எதனையும் செய்யவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் கடும் மழை, போதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு.



( ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் கடந்த ஒரு வார காலமாக மாலை வேளைகளில் தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையில் தற்போது கடும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

இதனால் மாவட்டத்தின் நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ளநீர் பெருக ஆரம்பித்துள்ளன.

வயல் நிலங்களில் விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்சியாக மழை பெய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வயல் நிலங்களும் நீரில் மூழ்கி வருகின்றன.

தொடர்சியாக கன மழை பெய்வதால் நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சில தாழ்நிலப் பகுதிகளில் தொடர்சியாக வெள்ள நீர் தேங்கி கிடப்பதால் டெங்கு நோய் பெருகக்கூடிய வாய்ப்பும் உள்ளன.

பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அனர்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக பார்வையிடச் செல்லுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் மாவட்ட அனர்ந்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# கிண்ணியாவில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு கடும் கண்டனம்

## சுதந்திர ஊடக இயக்கம்

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கிண்ணியா படகு விபத்து குறித்து செய்தி சேகரிக்கசென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை வன்மையாக கண்டிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (23) கிண்ணியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் நான்கு சிறுவர்கள் உட்பட ஆறு பேரின் உயிரைப் பறித்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரிக்கச்சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணையை கோறியுள்ளதுடன் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.



ஊடகவியலாளர்களான அப்துல் சலாம் முகம்மட் யாசிம், தினகரனின் மாகாண செய்தியாளர் (லேக் ஹவுஸ்), எச்.எஸ். எம். ஹலால்தீன், சக்தி/நியூஸ் ஃபர்ஸ்ட் நிருபர் மற்றும் தினகரன் ஊழியர் நிருபர் ஏ.எல். எம்.ரஃபைதீன் ஆகியோரே 'ஆத்திரமடைந்த பொதுமக்கள்' எனக்கூறி, அவர்களது பணிகளைச் செய்யவிடாமல் தடுத்து, விபத்து நடந்த இடத்தில் இருந்து விரட்டியடித்து குழுவினரால் தாக்கப்பட்டனர்.

முஹம்மட் யாசிம் என்பவர் தாக்கப்பட்ட பின்னர் விபத்து தொடர்பான நேர்காணல்கள் மற்றும் உரிய தகவல்கள் அடங்கிய கையடக்கத் தொலைபேசியை கும்பல் பலவந்தமாக எடுத்துச் சென்றது தொடர்பாக கிண்ணியா பொலிஸில் முறைப்பாடு (CIB (1) 10-/291) பதிவு செய்துள்ளார்.

கிண்ணியாவில் படகு விபத்து தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சோகமாக இருந்தாலும், பொதுமக்களின் கோபத்தை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலும், உண்மையை சரியான நேரத்தில் மற்றும் அனைத்து விவரங்களுடனும் தெரிவிக்கும் ஊடக உரிமையை எந்த தரப்பினரும் கேள்விக்குட்படுத்தவோ அல்லது தடுக்கவோ கூடாது.

ஊடகவியலாளர்களின் தாக்குதலையும், அவர்களின் தொழில் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதையும் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) ஒரு பாரதூரமான சம்பவமாகக் கருதுவதுடன், அதனை வன்மையாகக் கண்டிக்கிறது.

நாட்டின் எந்தப் பகுதியிலும் தற்போதுள்ள சட்டத்தை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்தும் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை உடனடியாக விசாரணை செய்து, அதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அரசாங்கத்தை கோறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் தோற்று நீக்கிகள் வழங்கிவைப்பு




(எஸ்.சபேசன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குகிருமித் தொற்று நீக்கிகள் வழங்கிவைப்பு.

RO-T-A-RY CLUB OF CO-LO-M-BO MI-D-C-I-T-Yயின் அனுசரணையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை (24) மட்டக்களப்பு மேற்கு மண்முனை தென்மேற்கு கோட்டக்கல்வி அதிகாரி திரு மூ.உதயகுமாரன்தலைமையில் மண்முனை தென் மேற்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட 21 பாடசாலைகளுக்குசுமார் இரண்டு லட்சம் ரூபாய்பெறுமதியான கிருமிதொற்று நீக்கிகள் மண் முனைதென் மேற்கு கோட்டக்கல்வி அதிகாரி அலுவலகத்தில் வழங்கிவைக்கப்பட்டது .

இதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்குமாகாண இணைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளருமாகிய பொன்னுத்துரை உதயரூபன் அவர்கள்கலந்து கொண்டதுடன் மண் முனைதென் மேற்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்குரிய தெரிவு செய்யப்பட்டபாடசாலைகளுக்கு தொற்றுநீக்கிகள் அடங்கிய பொதியும் வழங்கி வைக்கப்பட்டது மேலும் மட்டக்களப்பு மேற்கு வலயமண்முனை மேற்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட 30 பாடசாலைகளுக்கு 4 லட்சம் ரூபாய் பெறுமதியான கிருமித் தொற்று நீக்கிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளதுடன் கல்குடா கல்வி வலயத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 2 லட்சம் பெறுமதியான தொற்று நீக்கிகள் வழங்கப்பட்டுள்ளது ,மட்டக்களப்பு மேற்குகல்வி வலய ஏறாவூர் பற்று கோட்டத்தில் உள்ளதெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 2 லட்சம் பெறுமதியானகிருமித் தொற்று நீக்கிகள் வழங்கி வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வானொலி அரச விருது விழாவில் சக்தி வானொலிக்கு 9 விருதுகள்




(யோஜித் சாய்)

இலங்கையில் வானொலி ஊடகத்துறையில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் கலைஞர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அரச வானொலி விருது விழா2021 கடந்த திங்கட்கிழமை (22.11.2021) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விருது வழங்கல் விழாவில் இலங்கை ஊடக வரலாற்றில் சக்தி வானொலி அறிவிப்பாளர்கள் 9 விருதினைப் பெற்று சாதனைப்படைத்துள்ளனர்.. சிரேஷ்ட அறிவிப்பாளர் கணாதிபன், கீர்த்தனன், ஜெப்ரி ஜெபதர்சன், வனிதா, ஆரணி, மற்றும் பிரஜீவ், ஒஸ்மன் ஜே, சஹார்ஷ் பிரஜீவ் ஆகியோர் இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

**சிறந்த ஆராய்ச்சிபூர்வ நிகழ்ச்சி**
**(வணக்கம் தாயகம் - கணாதிபன்)**
**சிறந்த நேரலை மாலை நேர நிகழ்ச்சி**
**(ஆனந்த இரவு - கீர்த்தனன்)**
**சிறந்த நேர்காணல் நிகழ்ச்சி**
**(மாலை எக்ஸ்பிரஸ் - வனிதா)**
**சிறந்த வானொலி நாடக தயாரிப்பு**
**(கிருமி நாடகம் - ஆரணி)**
**சிறந்த செய்தி வாசிப்பாளர் (ஆண்)**
**(ஜெப்ரி ஜெபதர்சன்)**
**சிறந்த வானொலி சிறு விளம்பரம்**
**(வணக்கம் தாயகம் -பிரஜீவ்)**
**சிறந்த நிகழ்ச்சி முன்னறிவிப்பு குறியிசை**
**(ஹலோ சக்தி- பிரஜீவ்)**
**சிறந்த ஆக்கபூர்வமான வானொலி விளம்பரம்**
**(ஒஸ்மன் ஜே)**
**சிறந்த வானொலி நாடக சிறுவர் நடிகர்**
**(கிருமி நாடகம் -சஹார்ஷ் பிரஜீவ்)**

ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு சக்தி வானொலிக்கு பெருமை சேர்த்து இவ்வாறு தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறை ஒளிப்பு தினம் நவம்பர் மாதம் 25ம் திகதி உலகலாவிய ரிதியில் அனுநு;டிக்கப்பட்டு வருகின்றது உலகத்தில் பெண்களின் 40 வீகிதமான பெண்கள் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர் இதனை தடுப்பதற்கான விளிப்புனர்வு செயல்ப்பாடாகவே இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் காவிய பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் மாவட்ட செயலகத்தில் விளிப்புனர்வை ஏற்படுத்தும் வகையிலான துண்டு பிரசுரங்களையும் வெள்ளை பட்டி அணியும் நிகழ்வினையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

இன் நிகழ்வில் கலந்து கொண்ட காவிய நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திருமதி ரதி அஜணீத்குமார் கருத்துரைக்கையில் பெண்களுக்கு எதிரான வன் முறைகள் வீடுகளிளும் வேலைத்தளங்களிலும் போக்குவரத்தின் போதும் உடல் லியல் ரீதியாகவும் உளவியல் பாலியல் என பல விதமான வன்முறைகளுக்கு பெண்கள் சிறுமியாக இருக்கின்ற காலமுதல் வன்கொடுமைகளை அனுபவிக்கின்றனர் இதனை வெளியில் கூறினால் குடும்பத்தின் கொளரவம் பெற்றோர்களின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படும் எனும் என்னத்தில் பெண்கள் தங்களின் மனதுக்குள் பூட்டிக்கொண்டு வாழவேண்டியவர்களாக மாறுகின்றனர்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் உருவாகின்ற இடத்தை அடையாளப்படுத்தி சட்டத்தின் முன் கொண்டு செல்வதனுடாக எமக்கு எதிரான வன் கொடுமைகளை சமூகத்தில் இருந்து தவிர்த்துக்கொள்ளமுடியும் என குறிப்பிட்டார்.

பெண்களும் ஆண்களுக்கு சரி சமமாக உலகில் எல்லாத்துறைகளிலும் செயல்பட்டு வருகின்றனர் இருந்தபோதிலும் பெண்களுக்கு எதிரான வன் முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொன்டுதான் போகின்றது இதனை தடுபதற்கான விளிப்புனர்வு செயல்பாட்டினை வி எபெக்ட் நிறுவனமும் கடந்த 20 வருடங்களாக பெண்கள் தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இன் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்தி உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.யதிஸ்குமார் மாவட்ட தகவல் அதிகாரி வ.ஜீவானந்தன் காவியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிக்குழுவினரும் கலந்து கொண்டனர்.

# நாளை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை நிகழ்வை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாளை(2%)சனிக்கிழமை நாடளாவிய ரீதியிலே அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.





விசேடமாக கொழும்பு, அம்பாறை ,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பிரதானமாக முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளோடு, வடக்கு கிழக்கு மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

**கொழும்பில்...**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவும் குருபூஜையும் சேர்ந்த நிகழ்வாக நாளை 2% சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் அகில இலங்கை இந்துமாமன்றம் இந்து வித்தியா விருத்திச் சங்கம் இலங்கை சைவ நெறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக கனடா சைவ சித்தாந்த பீட இயக்குநர் சைவ சித்தாந்த அறிஞர் வைத்திய கலாநிதி இ.லம்போதரனின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தொடர்பான சிறப்புரை நிகழ்வும் ஏற்பாடாகியுள்ளது.

**யாழ்ப்பாணத்தில்..**

யாழ்ப்பாணத்தில், நாவலர் பிறந்த நல்லூரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் காலை 8.00 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களின் ஆசியுரை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க சைவப்புலவர் ஏ.அனுசரந்தன் அவர்களின் 'நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வும்' என்ற தலைப்பிலான சிறப்புரையோடும் தெல்லிப்பளை பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளோடும் இடம்பெறவுள்ளது.

**அம்பாறையில்...**


காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் , பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் தலைமையில் காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் திருமுன்னிலை வகிக்க அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க மாணவர்களின் கலை நிகழ்வுகளோடு சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமை மிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் நமக்காகச் செய்த அரும்பணி சைவத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

# காரைதீவில் நாளை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை நிகழ்வு

(காரைதீவு குறூப் நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை தினவிழா, நாளை(27) சனிக்கிழமை காலை காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றமும் இணைந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை தினவிழாவை ஏற்பாடு செய்துள்ளது.

மங்கல விளக்கேற்றல், நந்திக்கொடியேற்றல், அறநெறிக் கீதம், குருபூஜை வழிபாடுகளோடு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வு, காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் திருமுன்னிலை வகிக்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கிறார்.

இந்த நிகழ்விலே, சிறப்பு அதிதிகளாக பணிமன்றத் தலைவர் வெ.ஜெயநாதன், கல்விப்பணிப்பாளர்களான சோ.சுரநுதன் (திருக்கோவில்வலயம்), ஆ.சஞ்சீவன் (கல்முனைவலயம்), வி.ரி.சகாதேவராஜா(சம்மாந்துறைவலயம்) ஆகியோர் கலந்துசிறப்பிப்பார்கள்.

ஆன்மிக அதிதிகள் , விஷேட அதிதிகள் எனப் பலரும் கலந்து கொள்ளும் இந்நிகழ்விலே, மாணவர்களின் ஆளுமைத்திறன் வெளிக்கொணர்வு நிகழ்வுகளும் அவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், வரவேற்புரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிகழ்த்த ,நன்றியுரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீபிரியா கங்கைநாயகன் நிகழ்த்தவுள்ளனர்.

# மனித செயற்பாடுகளால் ஆபத்தை எதிர்நோக்கும் கால்நடைகள்!





(எச்.எம்.எம்.பர்ஸான்)

கால்நடைகளின் மேய்ச்சல் பகுதியில் பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற கால்நடைகளுக்கு ஆபத்தான கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் அதனை உட்கொள்ளும் கால்நடைகள் ஆபத்துக்களை எதிர்நோக்கி வருவதாக கால்நடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட நாவலடி பகுதியிலுள்ள மேய்ச்சல் நிலங்களிலே இவ்வாறான நாசகார செயல்கள் இடம்பெற்று வருவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் சிலர் உணவுக் கழிவுகளை பொலித்தீன் பைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களிலும் வீசிச் செல்கின்றனர்.

அத்துடன், பயன்படுத்திய முகக் கவசங்களையும் குறித்த பகுதியில் வீசிச் செல்கின்றனர். இதனை எமது கால்நடைகள் உட்கொள்வதால் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்து போகின்றன. இதனால் நாங்கள் பாரிய நஷ்டங்களை எதிர்நோக்குகிறோம்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி மேய்ச்சல் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கால்நடை வளர்ப்பாளர்கள் வேண்டிக் கொள்கின்றனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
wellness massage
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# நாவலரின் இறுதி நிமிடங்கள்

## இன்று நல்லைநகர் நாவலரின் 142 ஆவது குருபூஜை

### நல்லைநகர் ஆறுமுக நாவலர் அவர்கள் இலங்கையில் தமிழ் சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர். அன்னாரது 142 ஆவது குருபூஜை தினம் 27.11.2021 சனிக்கிழமை

#### நாவலரின் இறுதி நிமிடங்கள்

இரண்டு நாட்களாக திருமுறைகளைப் பாடுவதோடு மட்டும் நேரத்தைச் செலவு செய்தார். செவ்வாய்க்கிழமை இரவு நோயினால் பாதிக்கப்பட்டவர் புதன்கிழமை எழுந்து நீராட முடியாதளவு போய்விட்டது.

வேதாரணியத்து சைவ சிவாச்சாரியாரை அழைத்து நாவலர் நித்திய பூஜை செய்யும் ஆத்மார்த்த சிவலிங்கமூர்த்திக்கு பூஜைகள் நடைபெற்றது. பூக்களைக் கையிலெடுத்து ஒவ்வொன்றாகப் போட்டு தன்பாட்டிற் கும்பிட்ட வண்ணமிருந்தார் நாவலர்.

தன்னைச் சூழ இருந்தவர்களைப் பார்த்து தொடர்ந்து திருமுறைகளைப் பாடுங்கள் என்று கட்டளையிட்டார். எவரும் நாவலர் இறக்கப்போகின்றார் என்று கருதவில்லை. வெள்ளிக்கிழமை சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத் தலங்களின் விபூதியை எடுத்து அணிந்தார். தான் அணியும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டு தன் பூஜை அறையில் இருந்த கங்கைத் தீர்த்தத்தை பருகினார். சயனிக்கும் இடத்திற் தலையிற் கைகளைக் கூப்பிய வண்ணமாகக் கண்களை மூடித் தியானஞ்செய்தார்.

கார்த்திகை மாதம் 21ம் நாள் மக நட்சத்திரத்தில் இரவு 10 மணியளவில் அன்னாரது உயிர் பிரிந்தது. இவர் உயிர் பிரிவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை அவதானித்த மாணாக்கர்கள், சுற்றத்தார்கள் இவருக்குச் சமீபமாகச் சென்று இவரிடம் சில விடயங்களைக் கேட்க முற்பட்டனர்.

வித்தியாசாலை விடயமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். 'கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்' இதுதான் அவரது கடைசி வார்த்தை. அதன்பின் அவர் பேசவேயில்லை என்ன சொல்ல நினைத்தார் என்று இன்றுவரை தெரியவில்லை.

நாவலர் பெருமான் 56 வயது பதினொரு மாதம் 16ம் நாளில் இப்பூவுலக வாழ்வை நிறைவு செய்தார். வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்த நாவலருக்கு சனிக்கிழமை கைலாசப்பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக உள்ள அவரது வீட்டில் அந்திமக் கிரியைகள் நடாத்தப்பட்டன. பெருந்திரளான மக்கள் கூடி நாவலர் பெருமானுக்கு கண்ணீர்க் காணிக்கை செலுத்தினர். வரணி, கரணவாய் ஆதீனத்தார் முன்னிலையில் வேதாரணியத்து அப்புக் குருக்கள் எனப்படும் நமச்சிவாய தேசிகரால் நிர்வாண அந்தியேட்டி செய்யப்பட்டு அவரது வீட்டிலும் வண்ணார்பண்ணை கோம்பயன் மணற் சுடலையிலும் தேசிகராற் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன.



நாவலரது இறுதி ஊர்வலத்திற்காக பூக்களினால் ஒரு பூந்தேர் செய்யப்பட்டு பூதவுடல் வைக்கப்பட்டு அதற்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அன்பர்கள் நாவலரது பிரிவுத்துயர் தாங்க முடியாது அங்கப் பிரதட்சணமாக சுமார் 03 1/2 மைல் தூரம் சென்று சுடலையை அடைந்தனர் என்பது வரலாற்றில் மறக்கமுடியாத உருக்கமான ஒரு நிகழ்வு. கோம்பயன் மயானத்தில் இராத்திரி வேளை சந்தனக்கட்டைகள் அடுக்கி ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழ நாவலரின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாகியது.

'நானுயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது 32 வருட காலம் சைவசமய உண்மைகளைப் போதித்து வந்தேன்' இவை நாவலரின் கடைசிப் பிரசங்க வாசகங்கள். நாவலரைப் போல் நமக்கு யாருண்டு.

நாவலரின் வாழ்வு உண்மையானது. நாவலர் பெருமானுக்குப் பல நினைவுச்சின்னங்கள் இன்றுவரை நிறுவப்பட்டு வருகிறது. அவர் வாழுங்காலத்தில் அவருக்குச் சிலர் செய்த இடையூறுகளை நினைந்து நாம் வெட்கமடைய வேண்டும். அவரால் எம் சந்ததி பெற்ற பேறுகள்



ஏராளம். ஈழநாட்டில் சைவமும் தமிழும் இன்று நிலைபெற்று உள்ளதென்றால். அதற்கு இப் புண்ணியவானே முக்கிய காரணம் என்பதை உணரவேண்டும். அப்பெருமகனின் சரித்திரத்தை, சிறப்புக்களை சாதனைகளை அனைவரும் முழுமையாக படிக்க வேண்டும். சைவப் பாடசாலைகள், சைவ நிறுவனங்கள், அனைத்திலும் நாவலர் நினைவுச்சின்னங்கள் நிறுவப்பட்டு நாவலர் பெருமானை எம் சந்ததி மீள நினைப்பதற்கு நாம் வழி செய்யவேண்டும்.

(சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம் எனும் நூலிலிருந்து.....)

#### சுருக்க வரலாறு

ஆறுமுக நாவலர் (டிசம்பர் 18 1822 டிசம்பர் 5 18%9) தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். தமிழ்இ சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணம்இ நல்லூரில் தோன்றியவர். தமிழ் நூல்களை முதன் முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித்தவர். திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார் நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப. கந்தப்பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக்காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள். அரசாங்கத்தில் வேலை பார்த்தவர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள். சகோதரிகளுள் ஒருவர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களின் தாயார்.

#### கல்வி

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது 19ஆவது வயதில் (1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் எனும் பாதிரியாருக்குக் கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியருடன் சென்னைப் பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

#### பணிகள் சமயப் பணி

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார் நாவலர். சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசம்பர் 31, 1847ஆம் நாள் நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்டம்பர் 1848இல் தமது மத்திய கல்லூரி, 3 பவுண் மாதச் சம்பளஇ ஆசிரியப் பணியைத் துறந்தார்.

#### அச்சுப் பணி

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம் பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசன விதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்திநிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

#### தமிழகப் பணி

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது. சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார். பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கிச் சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறை மற்றும் திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கிச் சைவப்பிரசங்கங்கள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுர சமஸ்தானத்தில் பிரசங்கம் செய்தார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்திலே பிரசங்கித்து மீனாட்சிக்கு அணிவிக்கப்பெற்ற பரிவட்டமும் பூமாலையும் அணிவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.

குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமை ஆதீனத்தில் அவர் செய்த பிரசங்கத்தை மெச்சி நாவலரைப் பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள்இ ஓதுவார்கள் சூழ்ந்து வரச் சகல விருதுகள், மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள். அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார். அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார்.

சிதம்பர வழக்கின் பின் நாவலர் தருமபுரி, திருவிடைமருதூர், திருவேட்டக்குடி, காரைக்கால்,கோடிக்கரை ஆகிய தலங்களைத் தரிசித்த பின்னர் 1870 பங்குனியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.1879இல் இறபதமடைந்தார்.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)



# திருகோணமலை நகரில் குடிபோதையில் பெண்கள் மீது சேட்டை ; வாகனங்களுக்கும் சேதம்





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி வீதி லிங்கநகர் பிரதேசத்தில் பிரதான வீதியில் குடிபோதையில் அட்டகாசம் செய்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று (24) இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது...

குடிபோதையில் திருகோணமலை கண்டி வீதி பிரதான வீதியில் பயணித்த வாகனங்களுக்கு கற்களால் எறிந்து சேதப் படுத்தியதுடன் வீதியால் பயணித்த பயணிகளுக்கும் இடையூறு விளைவித்து வீதியால் பயணித்த பெண்கள்மீது முறையற்ற விதத்தில் நடந்து கொண்டமையினால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் குறித்த நபரை தாக்கி பொலிசாரிடம் ஒப்படைக்கட்டுள்ளார்

இவ்வாறு குடிபோதையில் அட்டகாசம் செய்த குறித்த நபர் கந்தளாய் முள்ளிப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர் (30வயது)எனவும் சிகிச்சை ஒன்றிற்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகை தந்ததாகவும் இன்றைய தினம் நகரில் பல வர்த்தக நிலையங்களில் அட்டகாசம் செய்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதக திருகோணமலை தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு குடிபோதையில் அத்துமீறி நடந்துகொண்ட நபரினால் அதிசொகுசு மோட்டார்கார் ஒன்று சேதமடைந்துள்ளதாகவும் பாதிக்கப் பட்டவர்களில் பலர் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட்டுள்ளதகவும் குறித்த நபரை கைது செய்து சட்ட வைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக்கல்லூரி 125 வது வருட நினைவாக பழைய மாணவர்களால் 3 திறன் பலகைகள்








(கதிரவன்)

திருகோணமலை சிறி கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில்1992ம் வருடம் சாதாரணதரமும்,

1997ம் வருடம் உயர்தரமும் கற்ற மாணவர்கள் ஒன்றிணைந்து 3 திறன் பலகைகளை Sma-rt Boa-rd கல்லூரிக்கு ஏற்படுத்தி தந்துள்ளனர்.

மாணவர்களின் தேவை கருதி பல்ஊடக அறை, விஞ்ஞானபிரிவு, இடைநிலை பிரிவு அறகளில் இவை பொருத்தப்பட்டுள்ளது.

இதனை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு புதன்கிழமை 2021.11.24 காலை நடைபெற்றது.

முந்நாள் ஓய்வுநிலை அதிபர்களான சி.தண்டாயுதபாணி, மா.இராசரெத்தினம், இ.புவனேந்திரன் ஆகியோரைக்கொண்டு பல்லூடக அறையிலும், ஓய்வுநிலை

முந்நாள் ஆசிரியர்களான த.சச்சிதானந்தராஜா, ந.விக்னேஸ்வரன், நா.ஜெகன்மோகன் ஆகியோரைக் கொண்டு விஞ்ஞான பிரிவிலும், முந்நாள் ஓய்வுநிலை ஆசிரியைகளான

திருமதி அ.கணேசலிங்கம், திருமதி பா.தர்மராஜா, திருமதி க.இராஜகோண் ஆகியோரைக் கொண்டு இடைநிலை பிரிவிலும் இவை அங்குரார்பணம் செய்து வைக்கப் பட்டது.

# வீரவீராங்களைகளுக்கு திருக்கோவிலில் பாராட்டு







(வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு நிருபர்)

இளைஞர் விவகார விளையாட்டு துறை அமைச்சினால் திருக்கோவில் பிரதேச பிரிவில் இளைஞர் கழகங்களுக்கிடையிலான நடாத்தப்பட்ட குழு மற்றும் சுவட்டு நிகழ்ச்சி விளையாட்டு போட்டிகளில வெற்றி பெற்ற வீர விராஙகனைகளுக்கு வெற்றி கிண்ணங்கள வழங்கப்பட்டது .

இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி கே.பிரபாகரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்படடது பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் அதிதியாக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ முபாரக் அலி உதவி பிரதேச செயலாளர் திட்டமிடல் பணிப்பாளர் கழக ஒருங்கினைப்பாளர் ரி நிசாந்தன் மற்றும் அதிபர்கள் பயிற்றுவிப்பாளர்கள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர் வெற்றி கண்ணத்தை வழங்கி சிறப்பித்தனர் AMI foundation akkaraipattu and jey group pvt நிறுவனம் கிண்ணஙகளை வழங்கியமைக்கு நன்றிகள் தெரிவிக்கினறனர்.

# 'எஸ்.பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்' சாய்ந்தமருதில் நாளை கவிஞர் பீர்முகம்மதுவின் நூல் அறிமுகவிழா!

(வி.ரி.சகாதேவராஜா)



சாய்ந்தமருதைச்சேர்ந்த முன்னாள் கல்விப்பணிப்பாளரும், எழுத்தாளருமான கலாபூசணம் கவிஞர் பீர்முகம்மது எழுதிய எஸ்.பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் என்ற நூல்அறிமுகவிழா நாளை(27) சனிக்கிழமை சாய்ந்தமருதில் நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகாரசபை ஏற்பாடுசெய்த இந்நிகழ்வு, நாளைகாலை 9.30மணிக்கு பிரதேசசெயலாளர் எம்.முகம்மது ஆசிக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேசசெயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்விப்பணிப்பாளர் செல்லத்துரை புவனேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். விசேடஅதிதியாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.ரிம்சான் கலந்துகொள்வார்.

கலாபூசணம் கவிஞர் பீர்முகம்மது, முன்னதாக 'விபுலாந்தஅடிகளும் முஸ்லிம்களும்' என்ற நூலை வெளியிட்டுவைத்தவரென்பது குறிப்பிடத்தகக்கது.

# மட்டக்களப்பில் விளையாட்டுத்துறையினை அபிவிருத்தி செய்ய ஆலோசனைகள் முன்னெடுப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கொரோனா நோய் பரவல் காரணமாக மாவட்டத்தின் விளையாட்டுத் துறை இரண்டு ஆண்டுகளாக பெரிதும் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றது. தற்போது கொரோனா நோய்த் தாக்கம் சற்று தளர்வடைந்து காணப்படும் நிலையில் விளையாட்டு துறையினை மேம்படுத்தி புத்தெளிச்சி பெறவைக்க மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சபை மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டுத் துறையினை அபிவிருத்தி செய்ய மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சபையினால் ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட அரசாங்க அதிபரும் விளையாட்டு அபிவிருத்தி சபையின் தலைவருமாகிய கே. கருணாகரன் தலைமையில் இன்று (24) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சபையின் நிருவாக சபைக் கூட்டத்தின்போதே மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பாக புதிய ஆலோசனைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

விளையாட்டு அபிவிருத்தி சபையின் நிருவாக சபைக் கூட்டத்தின்போது பிரதம கணக்காளர் கே. ஜெகதீஸ்வரன், காணிப் பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும் சபையின் செயலாளருமாகிய வீ. ஈஸ்வரன் உட்பட விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு சங்கங்களின் தலைவர், செயலாளர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# கல்முனையின் புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு வரவேற்பு

(சர்ஜுன் லாபிர்)

கல்முனைக் கோட்டக் கல்வி அலுவலகத்தின் புதிய கோட்டக் கல்வி அதிகாரி பீ.எம். ஸம்ஸம் அவர்களை வரவேற்று, பாராட்டும் நிகழ்வு இன்று (25) கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர் மஜீதிய்யா தலைமையில் இடம் பெற்றது.



புதிதாக பதவியேற்ற கோட்டக் கல்வி பணிப்பாளருக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவினரால் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக ஆசிரிய ஆலோசகர் ஏ.கே.வை.தாஸிம் அவர்களும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.எல் அமீர் ஏ பாறுக் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அட்டன் டிக்கோயாவில் விபத்து – ஒருவர் பலி – மூவர் காயம்



(க.கிஷாந்தன்)

அட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் படுங்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அட்டன் டிக்கோயா பகுதியிலிருந்து டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதிக்கு சென்றுக்கொண்டிருந்த குறித்த முச்சக்கரவண்டி 24.11.2021 அன்று இரவு 7 மணியளவில் பெரிய மணிக்வத்தை தோட்டத்திற்கு செல்லும் வீதியில் வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

முச்சக்கரவண்டி சாரதிக்கு முச்சக்கரவண்டியை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதியை சேர்ந்த சுந்தராஜ் (வயது - 65) மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் டிக்கோயா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.படுங்காயமடைந்த மூவரும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் இடமாற்றம்



( வி.ரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.எம்.வை.அறபாத் சம்மாந்துறை வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அதே வேளை சம்மாந்துறை வலய நிருவாகத்திற்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் அஹமட் கியாஸ் ஆறு வருடகால திருப்தியான சேவையின்பின்னர் அக்கரைப்பற்று வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.

சம்மாந்துறையைச்சேர்ந்த பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.எம்.வை.அறபாத் 2013இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து மட்டக்களப்பு மத்திவலயத்தில் பணியாற்றி பின்னர் 2014-2019வரை கல்முனை வலயத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளராக பணியாற்றினார்.

அதன்பின்பு 2020-2021 வரை அக்கரைப்பற்று வலயத்தில் பணியாற்றிய அறபாத் கடந்தவாரம் சம்மாந்துறை வலயத்திற்கு இடமாற்றம்பெற்று வந்துள்ளார்.




# குறிஞ்சாக்கேணி படகுவிபத்தில் பக்கச்சார்பற்ற நேர்மையான விசாரணை அவசியம்

(அ . அச்சுதன்)

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் மாணவர் உள்ளிட்ட அறுவர் உயிர் இழந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்

உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கும் அவர்தம் உற்றார், உறவினர்களுக்கும் எமது இரங்கலையும் துயர் பகிர்வினையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் ச. குகதாசன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்

விபத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுவரும் அனைவரும் விரைவில் குணமடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இந்த விபத்துப் பற்றிப் பக்கச் சார்பற்ற நேர்மையான விசாரணை நடத்தி இது போன்ற நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க உரிய அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி போல, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வேதத்தீவு,ஈச்சிலம்பற்றுப் பிரதேச செயலளார் பிரிவில் உள்ள இலங்கைத்துறை - மாதவிபுரம் - இலங்கைத்துறை- முகத்துவாரம் மற்றும் கறுக்காமுனை - புனையடி - இலங்கைத்துறை- முகத்துவாரம் ஆகிய இடங்களில் மாணவர்கள் நாள்தோறும் ஆறுகளைக் கடந்தே பாடசாலைக்குச் செல்கின்றனர். இந்த இரண்டு இடங்களிலும் உரிய அதிகாரிகள் கூடுதல்



கவனம் செலுத்துவதோடு ஆட்சியாளர் பாலம் ஆவன செய்ய வேண்டும் எனவும் மேலும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வைத்தியர்களை கௌரவிக்கும் நிகழ்வு





(பைஷல் இஸ்மாயில்)

கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் சேவை காலத்தைப் பூர்த்தி செய்து பிரியாவிடை பெற்றுச்செல்லும் வைத்தியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று (25) வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.வை.இஸ்ஹாக் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.வை.இஸ்ஹாகினால் விடைபெற்றுச் செல்லும் வைத்தியர்களான திருமதி ஏ.ஆர்.எப்.றிவ்சியா மற்றும் பீ.ஜே.ரோஷான் ஆகியோர்களுக்கு நினைவுச்சின்னத்தை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய ஆயுர்வேத ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், திறந்த பல்கலைக்கழகத்தின் முன்னாள் சமூகவியல் பீடாதிபதி முஹம்மட் ஜாபர், காரைதீவு மருந்தக வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சி.எம்.ஹாலித் உள்ளிட்ட வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# திருக்கோவில் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற இளைஞர் கழக வீரர்கள் பாராட்டி கௌரவிப்பு

(திருக்கோவில் நிருபர்-எஸ். கார்த்திகேசு)

திருக்கோவில் பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற இளைஞர் கழக வீரர்கள் பாராட்டி கௌரவிப்பு

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் இளைஞர் விவகார விளையாட்டுதுறை அமைச்சினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிப் பெற்ற கழக வீர வீராங்கனைகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் கே.பிரபாகரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமைமலை இடம் பெற்று இருந்தன.



இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள இளைஞர் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட குழு மற்றும் சுவட்டு நிகழ்ச்சி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற 15 கழகங்களைச் சேர்ந்த சுமார் 65 வீர வீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.



அத்தோடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் 33வது தேசிய மட்ட கிரிகெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள திருக்கோவில் பிரதேச பெண்கள் கிரிகெட் கழக வீராங்கனைகளுக்கான சீருடை மற்றும் காலணிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இருந்ததுடன் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.முபாரக் அலி மற்றும் நன்கொடையாளர்கள் விளையாட்டுதுறை பயிற்றுப்விப்பாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் பாடசாலை அதிபர்கள் விளையாட்டு வீர வீராங்கனைகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# மட்டக்களப்பு இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு தீர்க்க இரத்தானம்







கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், இளைஞர் பாராளுமன்றம் என்பவற்றின் ஏற்பாட்டில் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் இரத்ததான முகாம் இன்று இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஷீல் தலைமையில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் இளைஞர், யுவதிகள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.


மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஷீல் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவின் வைத்தியர் ஜே.எவஞ்செலினாதலைமையிலான இரத்த வங்கி பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(ந.குகதர்சன்)

# கட்டுமுறிவு ஆண்டான் குளத்தில் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணுக்கு வீடு அன்பளிப்பு

(க.ருத்திரன்)



மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் எல்லைக் கிராமமான கட்டுமுறிவு ஆண்டான் குளத்தில் கணவனால் கைவிடப்பட்ட நிலமையில் 2 பிள்ளைகளுடன் தனிமையில் வாழ்ந்து வந்த வறிய குடும்பமொன்றிக்கு புதிய வீடு இன்று புதன் கிழமை (24) வழங்கிவைக்கப்பட்டது.

வாகரை ஆண்டான் குளத்தைச் சேர்ந்த திருமதி ரவிந்திரன் தரணி என்ற பயனாளிக்கே இவ் வீடு கையளிக்கப்ட்டுள்ளது.

நீண்டகாலமாக வீடொன்று இல்லாமல் வசதிகளற்ற தற்காலிக கொட்டில் ஒன்றில் சிறு பிள்ளைகளுடன் பல சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தவர்களின் அவல நிலமை தொடர்பாக கணடா நாட்டில் வசிக்கும் அ.ரெட்னகுமார் என்ற உதவும் உள்ளம் கொண்ட நபரிடம் பிரதேச நலன் விரும்பிகள் விடுத்த வேண்டுகோளினை அடுத்து இவ் மனித நேய உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 மாத காலத்திற்கு முன்பு இவ் வீடு கட்டுவதற்கான பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இன்று பால் காச்சி புது மனை புகு விழா நிகழ்வு நடைபெற்றது.எனவே இவ் உதவியினை வழங்கி வைத்த மேற்படி நபருக்கு தமது நண்றியை குறித்த குடும்பம் தெரிவித்தனர்.

# 6 வயதுச் சிறுமியைக் கடத்திய குற்றச்சாட்டில் 25 வயது இளைஞன் கைது

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 6வயதுச் சிறுமியை கடத்தி சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 25வயதான இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் பெற்றோருடனான பணக் கொடுக்கல்-வாங்கலில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக குறித்த இளைஞன் சிறுமியைக் கடத்தி சித்திரவதை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் சந்தேக நபரான இளைஞனை கைது செய்ததுடன் சிறுமியையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மகளிர்களுக்கும் பியர் வயிறு அற்ற கணவனை பெற உரிமை விழிப்புணர்வு





(ந.குகதர்சன்)

இளைஞர் வலையமைப்பினால் மதுபானம் மற்றும் சிகரட் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள் அகில இலங்கை ரீதியாக 25 மாவட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் வலையமைப்பின் மாவட்ட பணிப்பாளர்களான எல்.ரி.ரிஜா முகம்மட், ஜே.எம்.அஸீம், மற்றும் என்.துவாரகா ஆகியோர் தலைமையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி விழிப்புணர்வு நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இவ் விழிப்புணர்வு நிகழ்வில் அனைத்து மகளிர்களுக்கும் பியர் வயிறு அற்ற கணவனை பெற உரிமை உண்டு மற்றும் சாராயக் கம்பனிகளின் தந்திரோபாயங்களுக்கு ஏமாறும் ஏமாளிகளை மூளை உள்ள எந்த பெண் தான் விரும்புவாள்? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகள் மற்றும் துண்டுபிரசுரங்கள் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

# பாலாறும், தேனாறும் பொழிவதாக சொன்ன இந்த அரசாங்கம் மந்தகதியில்

(க.கிஷாந்தன்)

பாலாறும், தேனாறும் பொழிவதாக சொன்ன இந்த அரசாங்கம் இன்று முடங்கி கிடப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் தெரிவித்தார்.

நுவரெலியா, தலவாக்கலையில் 25.11.2021 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மலையக தோட்ட தொழிலாளர்கள் எனும் தேசிய இனத்தின் குரல்வளை நசக்கப்படும் பொழுது உரிமையற்றவர்களாகவும், உணர்வற்றவர்களாகவும், நாயிழும் கேவலமாக சொந்த மண்ணில் நடாத்தப்படுகின்ற பொழுது பொங்கி எழுந்து கேள்விகளை எழுப்பினால் அவர்களுக்கு எதிராக அடக்குமுறை செய்யக்கூடிய ஒரு காட்டு மிராண்டி தனமான செயல்பாடை இந்த தோட்ட நிர்வாகங்கங்கள் செய்து வருகின்றது. அதற்கு இந்த அரசாங்கம் உடந்தையாக இருக்கின்றது.

இன்று தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களிடமிருந்து 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என வலியுறுத்துவதோடு, அப்பொழுது தான் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க முடியும் என கூறுகின்றது.

தோட்டங்க்ள காடாகி காணப்படுகின்றது. இந்த தோட்ட நிர்வாகத்திற்கு சவாலை விடுகின்றேன். தோட்ட நிர்வாகம், தோட்ட அதிகாரிகள் தோட்டத்தில் இறங்கி 20 கிலோ கொழுந்து பறித்து காட்டினார்கள் என்றால் அவர்கள், கொடுக்கின்ற நிபந்தனைகளுக்கு நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம்.

ஆக, நிர்வாக அடக்குமுறை காரணமாக பல தோட்டங்களில் உள்ள மக்கள் வீதியில் இறங்கி போராடுகின்றார்கள். இதற்கு




காரணம் நிர்வாகம் தொழிலாளர்களை அடிமைகளாக வழி நடத்துவது தான். அதே வேளை, ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதாக கூறப்பட்டு இன்று மூன்று நாட்கள் மாத்திரமே தொழில் வழங்குகின்றார்கள். நான்காவது நாள் தொழிலுக்கு சென்றால் தினக்கூலிகளாக நடத்துகின்றார்கள்.

தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை இவ்வாறு நசுக்குவது தொடர்பில் அரசாங்கத்திற்கு தெரியாதது ஒன்றல்ல. அனைத்து விடயங்களும் அரசாங்கத்திற்கு தெரியும். நிர்வாகம் மற்றும் அரசாங்கம் வேடிக்கை பார்கின்றனர்.

நாட்டில் வரவு செலவு இடம்பெறும் திட்டத்தில் சில யோசனைகளுக்கு தீர்வு வழங்குவதாக கூறும் இந்த அரசாங்கம் மலையக மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஏன் தீர்வு வழங்க தயங்குகின்றது. மலையக மக்களுடைய வீட்டு பிரச்சினை, சம்பள பிரச்சினை போன்றவையை ஏன் இந்த அரசாங்கம் கண்டும் காங்காமல் இருக்கின்றது.

தொடர்ந்து இந்த அரசாங்கம் மலையக மக்களை அடிமைகளாக வைத்துக் கொள்வதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. இவர்கள் ஆட்சிக்கு வரும் பொழுது மலையக மக்களுக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவோம், பிரச்சினைகளை தீர்த்து வைப்போம் என பொய்யான பிரச்சாரங்களை முன்வைத்தே இந்த அரசாங்கம் வாக்குகளை பெற்றது. அதேபோல் இந்த அரசாங்கத்தில் இருக்கும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் இவ்வாறான போலியான பிரச்சாரங்களையே முன்னெடுத்தார்கள்.

அத்தோடு, இந்த நாட்டில் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச நல்ல ஒரு நிர்வாகி, அவருடைய நிர்வாக திறமையில் மலையகத்தில் பாலாறும், தேனாறும் பொழிவதாக சொன்னார்கள். ஆனால் இன்று பஞ்சத்தையே மக்கள் எதிர்நோக்குகின்றார்கள். எனவே இந்த அரசாங்கத்தில் நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் மலையக சமூகத்தை கரிசனையோடு, சமூகம் சார்ந்த நல்ல திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# பெரியநீலாவணை விஷ்ணு கோவில் வீதி 72.7 மில்லியன் ரூபா செலவில் காபட் வீதி







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் 'கிராமிய வீதிகளை காபட் வீதிகளாக அபிவிருத்தி செய்யும்' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பெரிய நீலாவணை விஷ்ணு கோவில் வீதி 72.7 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று (25.11.2021) நடைபெற்றது.

கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை சுபத்திராம விகாராதிபதி ரன்முத்துகல தேரர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீதி அபிவிருத்திக்கான அடிக்கல்லை நாட்டி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியநீலாவணை விஷ்ணு கோவில் வீதி நீண்டகாலமாக குன்றும் குழியுமாக காணப்பட்டது. குறித்து இந்த வீதியை அபிவிருத்தி செய்து தர வேண்டும் என்று மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரிடத்திலும் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந் நிலையில். தற்போதைய அரசாங்கத்தின் கிராமிய வீதிகளை காபட் விதிகளாக தரம் உயர்த்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைகள் அமைச்சு, கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ராஜாங்க அமைச்சு, ஆகிவற்றின் நேரடி கண்காணிப்பின் கீழ் அபிவிருத்திப் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுத்துள்ளது.

2.67 கிலோ மீட்டர் நீளம் கொண்ட காபட் வீதியாக இந்த வீதிஅபிவிருத்தி செய்யப்படுவதால் பெரியநீலாவணை பிரதேச மக்கள், கடற்தொழிலாளர்கள், பாடசாலை மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், உட்பட பொதுமக்கள் நன்மை அடைவார்கள். வீதி அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திசாநாயக்க, டப்ளியு.டி. வீரசிங்க, மற்றும் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் மக்கள் தமது நன்றிகளை தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி. சுஜித் பிரியந்த, இராணுவ கட்டளை அதிகாரி மேஜர், ஜெயந்த எதிரிசிங்க, மாநகர சபை உறுப்பினர்களான கதிரமலை செல்வராஜா, எஸ். குபேரன் ஆகியோரும் பெரியநீலாவணை வெஸ்டன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், ஆலயங்களின் பிரதிநிதிகள், மகளிர் அமைப்புகளின் உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமூக நலன் விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வானொலி அரச விருது பெற்றார் ஜே.வஹாப்தீன்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப்.எம். அறிவிப்பாளரும் ஆசிரியரும் கவிஞரும் எழுத்தாளருமான ஜே. வஹாப்தீன் வானொலி அரச விருது பெற்றார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வானொலி அரச விருது விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பிறை எப்.எம். மூன்று விருதுகளைப் பெற்றுள்ளது.

அறிவிப்பாளர் ஜே.வஹாப்தீன் பிரதியாக்கத்துக்கான வானொலி தேசிய அரசு விருதையும் சிறந்த நடிகருக்கான சிறப்பு பரிசையும், அறிவிப்பாளர் எம்.ஏ. ரமீஷ் கலந்துரையாடலுக்கான விருதையும் பெற்றுள்ளனர்.

ஒலுவில் மண்ணின் எழுத்தாளரான வஹாப்தீன், தனது கலை, இலக்கியத் துறைக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவர் எழுதியுள்ள நாவல்களான கலவன் கட்டிகள், குலைமுறிசல், தோறாப்பாடு ஆகிய நாவல்களுக்கு 'பெயாவே' தேசிய விருதுகளும், கிழக்கு மாகாண சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார். அத்தோடு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இளங்கலைஞர் விருதும் பெற்றவர். அரச ஊழியர்களுக்கான தேசிய போட்டிகளில் பல முறை தேசிய விருதுகளை வென்றவர். வேரில்லா பூச்சியங்கள், அஷ்ரப் எனும் தீ, கண்ணாடி குளத்து கவிதை, வெட்டு கற்கள், வெயிலில் ஒரு வீரப்பழம், முடக்கத்தான் போன்ற கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். அதேபோன்று அவலக்குரல், கலங்கிய விழிகள், பேரலை, திசை மாறிய பறவை, கந்தலாடை போன்ற குறுந்திரைப்படங்களையும் இயக்கி நடித்து வெளியிட்டுள்ளார்.

கலைத்துறையில் பன்முக ஆளுமை கொண்ட வஹாப்தீன், பிறை எப்.எம். வானொலியில் தொகுத்து வழங்குகின்ற 'சந்தன காற்று' என்னும் நிகழ்ச்சி பிரபலமானது.

சனிக்கிழமை தோறும் நாடகம், நடிப்பு, இலக்கியம் என்று அந்த நிகழ்ச்சி பல்லாயிரம் நேயர்களை கவர்ந்தது. அந்த நிகழ்ச்சிக்காக நடிப்பு, பிரதியாக்கம் என இரண்டு துறைகளில் ஜே.வஹாப்தீன் அரச விருது பெற்றிருக்கிறார்.

ஒலுவில் மண்ணில் முதன் முதலாக வானொலி விருது பெற்றவர் இவராவார். தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஜே.வஹாப்தீன் கலாநிதிப் பட்டத்திற்காக கற்றுக் கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது .

# தென் கிழக்கு பல்கலைக்கழக நூலக ஆவண காப்பகத்திற்கு நவமணி பத்திரிகைகள் கையளிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25 ஆவது ஆண்டை முன்னிட்டு பல்கலைக்கழக செயற்பாடுகளின் முன்னேற்றகரமான திட்டங்களில் ஒன்றான நூலக ஆவண காப்பகத்திற்குத் தேவையான ஆவணங்களைத் திரட்டும் வேலைத்திட்டத்திற்கு பத்திரிகைகளை கையளிக்கும் நிகழ்வு (23) செவ்வாய்க் கிழமை நவமணி அலுவலகத்தில் இடம் பெற்றது.

தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நூலகர் எம்.எம். றிபாய்தீனின் பணிப்புரைக்கமைய, நூலக காப்பகப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவி நூலகர் எஸ்.எல்.எம். சஜீரின் தலைமையில் கொழும்பில் அமைந்துள்ள நவமணி அலுவலகத்திற்கு விஜயம் செய்து, நவமணிப் பத்திரிகையின் 25 கால வெளியீடுகள் மற்றும் இதர ஆவணங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது நவமணி பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.டி.எம். றிஸ்வி, பிரதம ஆசிரியர் என்.எம்.அமீன் மற்றும் தென் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் எஸ்.எல்.எம். சஜீர், நூலகக் காப்பாளர் ஐ. அப்துல் ஹலீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறுபான்மை மக்களின் சமூக குரலாக ஓங்கி ஒலித்த ஊடகமான நவமணிப்பத்திரிகை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சிறுபான்மை சமூகத்தினரின் வரலாற்று ஆவணமாக கருதப்படுகின்ற இப்பத்திரிகை அழிந்து விடாது பாதுகாக்கப்படும் அதேவேளை, இவ் ஆவணத்தினை இளம் மாணவச் சமூதாயம், ஆராய்ச்சி ஆய்வாளர்கள் பயன்படுத்துவதற்கும் மற்றும் சமூகத்தின் இருப்புக்கு இப்பத்திரிகை ஆவணமாகத் திகழ வேண்டும் என்கின்ற தூர நோக்குடனும் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நூலக காப்பகத்திற்கு கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் மூன்று இடங்களில் நவமணிப் பத்திரிகையைப் பார்க்கும் வாய்ப்பினை நவமணி நிருவாகம் ஏற்படுத்தியுள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம், பேருவளை ஜாமிஆ நளீமியா நூலகம், கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம் என்பனவற்றில் நவமணிப் பத்திரிகையின் 25 வருடகால வெளியீடுகளைப் பார்வையிடலாம்.

# போது வைத்திய நிபுணரின் சேவை சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும்

## வைத்திய கலாநிதி ஜி.சுகுணன்







(பாறுக் ஷிஹான்)

எதிர்காலத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலைக்கு ஏற்படுத்துவது தொடர்பில் சாத்தியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி. சுகுணன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நேற்று (25) சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மீளமைக்கப்பட்ட மருத்துவ ஆய்வுகூட திறப்பு விழா மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது

கல்முனை பிராந்தியத்தில் சுகாதார துறையை மேம்படுத்துவதற்கு தூரநோக்குடன் திட்டமிட்ட வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இந்நிலையில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை இந்த பிராந்தியத்தில் உள்ள ஏ தர முன்னோடி வைத்தியசாலை ஆகும்.இங்கு பல்வேறுபட்ட வளபற்றாக் குறைகள் காணப்படுகின்றன.உலக வங்கியின் நிதி பங்களிப்புடன் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இவ் வைத்தியசாலையை உள்வாங்கி பலதரப்பட்ட பௌதீக வள அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் அடுத்த ஆண்டு முதல் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து பிரதேச வைத்தியசாலைகளுக்கும் தனியார் பாதுகாப்பு சேவையையும் சுத்திகரிப்பு சேவையையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் கல்முனை பிராந்தியத்திற்கு புதிகாக நோயாளர் காவு வண்டி கிடைக்கின்ற போது சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதை உறுதியாக தெரிவிப்பதோடு தற்போதுள்ள நோயாளர் காவு வண்டியை உடனடியாக திருத்தி அமைத்து மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலையின் சேவையில் மேலும் விரிவுபடுத்தும் வகையில் இவ் வைத்தியசாலைக்கு பொது வைத்திய நிபுணரின் சேவையின் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.அந்த வகையில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் பொது வைத்திய நிபுணர் சேவையை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான ஒப்புதல்களை பெற்றுள்ளதோடு எதிர்காலத்தில் இது குறித்து துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இப்பிராந்தியத்தில் மாதிரி வைத்தியசாலையாக மாற்றியமைப்பதே எமது எண்ணமாகும். இதற்கு தேவையான கட்டமைப்புகளை திறமையாக வடிவமைப்பதில் நான் எப்பொழுதும் பின் நிற்கப்போவதில்லை.அந்த வகையில் இவ் வைத்தியசாலையை முன்னணி மாதிரி வைத்தியசாலையாக திறம்பட கட்டியெழுப்புவதில் எமது பிராந்திய பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் திட்டமிடல் வைத்திய அதிகாரி உட்பட அத்தனை உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்போடு எண்ணம் கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். எச் .கே. சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ,கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம் பி ஏ.வாஜித், வருகைதரு விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஐ. எல் மாஹில்,கல்முனை பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம். சி. எம் .மாஹிர், உயிரியல் வாயு பொறியியலாளர் ஆர் .ரவிச்சந்திரன், தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் பி .எம். நசுறுடீன், வைத்தியசாலையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. புஹாது உட்பட வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்



# மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் 5 ஆவது இலக்கிய விழா!!












**(கல்லடி நிருபர்)**

மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடாத்திய மண்முனைப்பற்று பிரதேச இலக்கிய விழா நேற்று 25.11.2021 வியாழக்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி தலைமையில் ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

அதிதிகள் வரவேற்பினை தொடர்ந்து, மங்களவிளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டதனைத் தொடர்ந்து வரவேற்புரை, வரவேற்பு நடனம் மற்றும் பிரதேச செயலாளரின் தலைமை உரை என்பன இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து புதிய மழை தூறல் 5 நூலானது பிரதேச செயலாளரினால் வெளியிட்டுவைக்கப்பட்டதுடன், நூலின் முதற்பிரதி பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏனைய சிறப்பு மற்றும் கௌரவ அதிதிகள் உள்ளிட்ட கலைஞர்களுக்கும் பிரதேச செயலாளினால் நூலின் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக 5 ஆவது தடவையாக இடம்பெற்றுவரும் இலக்கிய விழாவில் இவ்வாண்டிற்கான இலக்கிய துறைக்கான கௌரவம் மூத்த இலக்கியவாதியான ச.க.பொன்னம்பலம் அவர்களுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டது. சுகாதார முறைப்படி இடம்பெற்ற நிகழ்வினை ஆரையூர் கலாமன்றம், இலங்கேஸ்வரா இசைக்குழு மற்றும் இராமகிருஷ்ண மிசன் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் மேடையை அலங்கரித்திருந்ததுடன், நிகழ்வில் கலந்து கொண்டு தமிழ் மொழி வாழ்த்துப்பாவினை பாடிய மாணவர்களுக்கும் அதிதிகளால் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்தோடு குறித்த நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.தில்லைநாதன் கலந்துகொண்டிருந்ததுடன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.எல்.விவேகானந்தராஜா, நிருவாக உத்தியோகத்தர், கிராம உத்தியோத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள், கலாசார அதிகாரசபையின் உறுப்பினர்கலெனமட்டுப்படுத்தப்பட்டளவிலானோர் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

# இளைஞர்களை வழிப்படுத்தினால் சமுதாயங்கள் சிறந்த எதிர்காலத்தை அடைந்து கொள்ளலாம்

## சமூக உணர்ச்சிக் கற்றல் பாடத் திட்டக்கற்றலை ஆரம்பித்து வைத்து நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரி தவசீலன் உரை




**(ரக்ஸனா)**

இளைஞர்களை வழிப்படுத்தினால் சமுதாயங்கள் சிறந்த எதிர்காலத்தை அடைந்து கொள்ளலாம் என அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆர். தவசீலன் தெரிவித்தார்.

சமூக உணர்ச்சிக் கற்றல் பாடத்திட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறி மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டத்தில் வியாழக்கிழமை 25.11.2021 ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் இணைப்பாளர் அனுலா அன்ரன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் இளைஞர் சேவை அலுவலர்கள் இளைஞர் கழக உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாதர் சங்க அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சுமார் 20 இற்கு மேற்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரி தவசீலன் எமது நிறுவனம் சிறுவர்களோடும் இளைஞர்களோடும் இணைந்து பணியாற்றி வருகின்றது. இளைஞர்களின் எதிர்கால வாழ்வோடு அக்கறை கொண்டதாக எமது பணிகள் பரந்துபட்டிருக்கின்றன.

காலத்திற்கு ஏற்றதொரு விடயமாக இந்தப் பயிற்சி நெறியைக் கருத் முடியும் சமகாலத்தில் எழுகின்ற சமூகப் பிரச்சினைகள் குறிப்பாக இளைஞர்கள் எவ்வாறான கண்ணோட்டத்தில் ஏனைய சமூகப் பிரதிநிதிகளால் பார்க்கப்படுகின்றார்கள் என்பதோடு இளைஞர்களையும் இளைஞர்கள் சார்ந்த சமுதாயத்தையும் வழிப்படுத்துகின்ற வகையிலே இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

இந்நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்ற மட்டக்களப்பு மாவட்டக் காரியாலய உதவிப் பணிப்பாளர் யூ.எல். அப்துல் மஜீத் மட்டக்களப்பு உளவளத்துறை அமைப்பின் பணிப்பாளர் எஸ். ஸ்ரீதரன் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ரீ. குணரெட்ணம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இளைஞர்களின் சமூகப் பங்கேற்பை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள சமூக உணர்ச்சிக் கற்றல் பாடத்திட்டத்தில் சமூகத்தின் தேவை மற்றும் நேர்மறையான மாற்றத்திற்காக வித்திடப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதாக திறன்மிக்க இளைஞர்களை உருவாக்குதல் ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டக் குறிக்கோளாக உள்ளடக்கப்பட்டிருப்பதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் இணைப்பாளர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

மேலும் இந்த நோக்கங்களை அடைவதற்காக ஆரோக்கியமான குழந்தைப் பருவம் எண்ணறிவு எழுத்தறிவை வளர்த்தல் கட்டிளமைப் பருவ இளையோரின் வாழ்க்கைத் தர அப்விருத்திச் செயற்பாடுகள் தொழில் துறைக் கல்வியினூடாக ஊழல்களற்ற தொழில் திறன் விருத்தி மறு உற்பத்திச் சுகாதாரம் சமூக ஈடுபாட்டை ஊக்குவித்து விருத்தி செய்தல் என்பன அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாதுகாப்பான அணுகுதல் தொடர்பான பயிற்சி




**(ரக்ஸனா)**

பாதுகாப்பான அணுகுதல் தொடர்பான பயிற்சி நெறி ஒன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தொண்டர்களுக்கு வியாழக்கிழமை(25) இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையில் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்புக் கிளையைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 25 தொண்டர்களுக்கு செஞ்சிலுவை அமைப்பைப் பற்றிய கொள்கை விளக்கங்கள், மற்றும் தொண்டர் சேவை செய்யும் போது எவ்வாறு நடந்து கொள்தல், தொண்டர் சேவையின்போது அணிய வேண்டிய பாதுகாப்பான அங்கிகள், உள்ளிட்ட பல பயிற்சிகளும், விளக்கங்களும், வழங்கப்பட்டன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் கிளையின் தலைவர் த.வசந்தராஜா, பொருளாளர் வ.சக்திவேல், நிறைவேற்று உத்தியோகஸ்த்தர் திருமதி.பி.வேணுஷா, மற்றும் ருத்திராஜ் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு தொண்டர்களுக்கு விளக்கங்களை வழங்கினர்.

# திருமலை புனித சூசையப்பர் கல்லூரி பழைய மாணவன் ஜோய் நிசான் ஒலிபெருக்கி சாதன தோகுதியை அன்பளிப்பு

**(கதிரவன்)**

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பழைய மாணவன் ஜோய் நிசான் ஒலிபெருக்கி Sound System ,சாதன தொகுதியை அன்பளிப்பு செய்துள்ளார்.

2006 வருடம் உயர்தரம் பிரிவில் கற்ற இவர் அவுஸ்திரேலியா நாட்டில் வசித்து வருகிறார்.

வியாழக்கிழமை 2021.11.25 நடைபெற்ற காலை ஒன்றுகூடலின் போது இது வழங்கி வைக்கப்பட்டது.

ஜோய் நிசானின் உறவினர் ரோஸ் மைக்கல் இதனை வைபவரீதியாக அதிபரிடம் வண. தந்தை அல்பிரட் விஜயகமலனிடம் வழங்கி வைத்தார்.

தரம் 10,தரம்11 வகுப்புகளுக்கு பயன்படுத்தப்பட உள்ள இத்தொகுதியினை பகுதிதலைவர் திருமதி எஸ்.டுசாந்தினி மைக்கலிடம் இருந்து கையேற்றார்.




# ஒவ்வொரு பெரிய சாதனையும் சிறிய முயற்சியிலும் இடைவிடாத உழைப்பிலும் தான் படைக்கப்படுகின்றது

## குறுந்திரைப்பட தயாரிப்பாளராக அவதாரம் எடுத்துள்ள வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

ஒவ்வொரு பெரிய சாதனைகளும் சிறிய முயற்சியிலும் இடைவிடாத உழைப்பிலும் தான் படைக்கப்படுகின்றன. அந்தவகையில் இந்திய சினிமா எனும் பெரும் விருட்சத்தின் அடியில் துளிர்க்கும் எம்மவர் சினிமாவும் ஒரு பெரும் விருட்சமாக வளர வேண்டுமானால் இரசிகர்களின் ஆதரவு எனும் உரமும் இலாபம் எனும் நீரும் அவசியம் என வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் தெரிவித்தார்.

சிப்ஸ் சினிமாஸ் எனும் தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக 'கலிகாலன்' எனும் சிறிய திரைப்படத்தினை தயாரித்துள்ள அவர் 2021 - கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடப்படவிருக்கும் இத்திரைப்படம் தொடர்பில் கல்முனை ஊடக மையத்தில் இன்று இரவு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




மேலும் தனது கருத்தில்;

ஈழத்துக் கலைஞர்களின் பாரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் 'கலிகாலன்' போன்ற திரைப்படங்களை நாம் ஆர்வத்துடன் சென்று பார்வையிடுவதுடன், எமது கலைஞர்களை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாமல் எமது கலைஞர்களின் திறமைகளை நாம் பாராட்டுவதன் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக சினிமா பாரிய வளர்ச்சி காணும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

அத்தோடு எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியாகவுள்ள 'கலிகாலன்' திரைப்படத்தை திரையரங்குகளில் சென்று பார்வையிடுவதுடன் ரசிகர்கள் தமது ஆதரவை வழங்குவதன் மூலம் மேலும் பல சினிமாக்கள் கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் இருந்து பல திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கும் மட்டக்களப்பு சினிமா வர்த்தக ரீதியில் வளர்ச்சி காண்பதற்கும் சினிமா துறை சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்களின் ஆதரவினையும் மட்டக்களப்பில் இருந்து சினிமாத்துறைக்காக பாரிய பங்காற்றிவரும் கலைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றேன். ஒவ்வொரு பெரிய சாதனைகளும் சிறிய முயற்சியிலும் இடைவிடாத உழைப்பிலும் தான் படைக்கப்படுகின்றன. அந்த வகையில் இந்திய சினிமா எனும் பெரும் விருட்சத்தின் அடியில் துளிர்க்கும் எம்மவர் சினிமாவும் ஒரு பெரும் விருட்சமாக வளர வேண்டுமானால் இரசிகர்களின் ஆதரவு எனும் உரமும் இலாபம் எனும் நீரும் அவசியம். தாம் செலவழிக்கும் பணம் திரும்பி வரும் எனும் நம்பிக்கை மிகவும் தூர்ந்து போயிருக்கும் நிலையிலும் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ச்சியாக எம்மை போன்று குறுந்திரைப்படங்களை தயாரிக்கின்றனர்.

அந்தவகையில் 'சிப்ஸ் சினிமாஸ்' எனும் எனது தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக 'கலிகாலன்' எனும் சிறிய திரைப்படத்தினை 2021 - கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிட இருக்கின்றோம். இத்திரைப்படத்திற்கு மக்கள் பெரும் வரவேற்பை கொடுப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.தற்போது மட்டக்களப்பில் சினிமா வர்த்தக ரீதியில் வெற்றி பெறுவதற்கான காலம் கனிகின்றது என்றே கூறலாம். மேலும் இதுவரை மட்டக்களப்பு திரையரங்குகளில் மாத்திரம் திரையிடப்பட்டு வந்த இவ்வகையான சிறிய திரைப்படங்கள்இ 'கலிகாலன்'திரைப்படத்தின் மூலமாக அம்பாறை மாவட்டத்திற்கும் நகர்ந்திருப்பது இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் மற்றுமொரு சான்றாகும்.

எனது தயாரிப்பில் வெளியாகின்ற கலிகாலன் குறுந்திரைப்படமானது மட்டக்களப்பின் பிரபலமான இயக்குநராக அடையாளம் காணப்பட்டுள்ள கு. கோடீஸ்வரன் என்பவர் இயக்கியுள்ளர்.இக்குறுந்திரைப்படமானது திரையரங்கு இரசிகர்களைக் கவரும் விதமான ஜனரஞ்சக சினிமா பாணியில் சிறந்த கதைஇ திரைக்கதைகளைக் கொண்டு படங்களை இயக்கி இருக்கின்றார். சிறிய திரைப்படங்களாக இருந்தாலும் அவை தொடர்ச்சியாக வெளியிடப்படும் போது ஏனைய தொழிநுட்பக் கருவிகளின் தரமும் கலைஞர்களின் திறனும் தானாக மேம்படும் எனும் நம்பிக்கையை அவர் கொண்டுள்ளதை இக்குறுந்திரைப்படத்தில் நாம் காணலாம்.

எமது இந்த முயற்சி மக்கள் மத்தியில் பெரும் ஆதரவையும் வரவேற்பையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம். நல்ல முயற்சிகளுக்கு எப்பொழுதும் மக்களின் ஆதரவு இருக்கும் என்பதற்கு சான்றாக அவர்களது திரைப்படங்கள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பங்களில் திரையரங்கில் முண்டியடித்த சனக்கூட்டமே சான்றாகும்.முழு நீளத் திரைப்படத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக அமைந்திருந்தாலும் குறுகிய நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இந்த சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதால் தயாரிப்பு செலவு குறைக்கப்படுவதுடன்இ குறுகிய காலத்திற்குள் தொடர்ச்சியாக படங்களை வெளியிட்டு இரசிகர்களின் கவனத்தை ஈர்க்க முடியும்.

தற்போது வர்த்தக சினிமாவை வளர்க்க புதியதொரு கோணத்தில் புதியதொரு யுக்தியாக மட்டக்களப்பில் முழுநீளத் திரைப்படங்களுக்கு பதிலாக அதன் குறுகிய வடிவமாக சுமார் 30 முதல் 45 நிமிடங்களுக்கு இடைப்பட்ட சிறிய திரைப்படங்கள்தயாரிக்கப்பட்டு அவை திரையரங்குகளில் வெளியிடப்பட்டு வருவதுடன் ரசிகர்களின் அமோக ஆதரவினையும் பெற்றுவருகின்றது.

அந்தவகையில் வர்த்தரீதியிலான சினிமாக்களை தயாரிப்பதற்கு எமக்கு முன் உள்ள பிரதான சவால்களாக நவீன தொழில் நுட்பங்களைப் பெற்றக்கொள்வதும் அதனைக் கையாள்வதற்கான அனுபவமிக்க கலைஞர்களை உருவாக்குவதும்இ முழு நீளத் திரப்படங்களை உருவாக்க எடுக்கும் நீண்ட காலம் பெரும் பொருட்செலவு என நீண்ட பட்டியல் காணப்படுகிறது. இவை தவிர இந்தியத் திரைப்படங்களின் பெரும் ஆளுமைக்கு மத்தியில் எமது ஈழத்து திரைப்படங்களை நோக்கியும் இரசிகர்களைத் திருப்புவதும் பெரும் போராட்டமாகவே அமையும். இவற்றிற்கு மத்தியில் எமது திரைப்படங்களை வர்த்தகரீதியில் வளர்க்கவே முடியாதா எனும் கேள்விக்கு 'முடியும்' எனும் திடமான நம்பிக்கையில் இந்த புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

எனவே எமது சினிமா வர்த்தக ரீதியில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளராமல் போனதற்கு இங்கு இடம்பெற்ற அசாதாரன சூழ்நிலைகளே பிரதான காரணம் என்பது ஒரு சிலரின் வாதமாக இருக்கிறது. அது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இருந்தாலும் அது மட்டுமே காரணம் என்று கூறிவிட்டு நாம் ஒதுங்கிக் கொள்ள முடியாது. இன்றைய சூழலில் எம்மத்தியில் இருக்கும் பல்வேறு சவால்களைப் புரிந்துகொண்டு அதற்கான மாற்று யுத்திகளை வகுத்து அதனூடாக எமது சினிமாவை வளர்ப்பதே பொருத்தமாக இருக்கும் என நம்புகின்றேன் என்றார்.

# மட்டக்களப்பு மாநகர சபை சுகாதார ஊழியர்களுக்கான சுகாதார பாதுகாப்பு அங்கிகள் மற்றும் வைரஸ் தோற்று நீக்கி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு










(சுமன்)

மட்டக்களப்பு மாநகர சபை சுகாதார ஊழியர்களுக்கான சுகாதார பாதுகாப்பு அங்கிகள் மற்றும் வைரஸ் தொற்று நீக்கி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மட்டு மாநகர மண்டபத்தில் நடைபெற்றது .

மட்டக்களப்பு மாநகரசபை உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி திட்டங்களின் ஒரு செயற்திட்டமாக மாநகர சபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான பாதுகாப்பு சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன .

அந்தவகையில் தற்போதைய அசாதாரண சூழ்நிலை மற்றும் காலநிலை மாற்றத்தின் காரமாக ஏற்படும் வைரஸ் தொற்றுகளில் இருந்து ஊழியர்களின் சுகாதாரத்தினை பாதுகாக்கும் வகையில் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் சுகாதார ஊழியர்களுக்கான சுகாதார பாதுகாப்பு அங்கிகள் மற்றும் வைரஸ் தொற்று நீக்கி உபகரணங்கள் இன்று வழங்கி வைக்கப்பட்டது .

இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் எம் .தயாபரன் இ பிரதி ஆணையாளர் . மாநகர பொறியிலாளர் இமாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு காதார ஊழியர்களுக்கான சுகாதார பாதுகாப்பு அங்கிகள் மற்றும் வைரஸ் தொற்று நீக்கி உபகரணங்கள் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

